**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண்: 8/2015**

**வா.சா.1**

**நாள் :19.11.2019**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44ம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | **வனரோஜா** | | | |
| தந்தை பெயர்: | **சண்முகம்** | | சாதி: | |
| கிராமம்: | அம்மன்பேட்டை | | தொழில்: | அங்கன்வாடி பணியாளர் (ஓய்வு) |
| தாலுக்கா: | | | வயது : | 63 ஆண்டுகள் |

**வா.சா.1 : முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவர் மூலம் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

(1) தாவா 3வது அயிட்ட சொத்து குறித்து என் தாயார் பெயரில் உள்ள கிரைய பத்திரம். வா.சா.ஆ.1.

(2) தாவா 2வது அயிட்ட சொத்து குறித்து என் தந்தை பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல். வா.சா.ஆ.2.

(3) 3வது அயிட்ட சொத்துக்கு தெற்கு பக்கம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் கிரைய பத்திரம். வா.சா.ஆ.3.

(4) 2 வது அயிட்ட சொத்துக்கு கிழக்கு பக்கம் நான் கிரையம் வாங்கிய சொத்தின் கிரைய பத்திரம். வா.சா.ஆ.4.

(5) வாதி 05.01.2015 ஆம் தேதி 1 மற்றும் 5 பிரதிவாதிகள் மீது நடுக்காவேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட ரசீது. வா.சா.ஆ.5.

(6) 11.01.2015 ஆம் தேதி வாதி நடுக்காவேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல். வா.சா.ஆ. 6.

(7) 11.05.2015 ஆம் தேதி வாதி திருவையாறு காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் நகல். வா.சா.ஆ. 7.

(8) வாதி 1 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த முன் எச்சரிக்கை மனுவின் நகல். வா.சா.ஆ.8.

(9) 5 வது பிரதிவாதி வாங்கி கொள்ளாமல் திருப்பி அனுப்பிய கேவியட் நோட்டிஸ். வா.சா.ஆ.9.

(10) இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 1 வது பிரதிவாதியின் வழக்கறிஞர் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு .வா. சா.ஆ.10.

(11) அந்த அறிவிப்பிற்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.11.

(12) அந்த பதில் அறிவிப்பிற்கு 1 வது பிரதிவாதியின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு. வா.சா.ஆ.12.

தாவாபடி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

/ஒ .ம்/

திரு. A. தனசேகரன், BSc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.